துடிப்பு

2009



துளி – 8

இன்ரறக்ட் கழகம்

வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை

யாழ்ப்பாணம்.

துடிப்பு

2009



Vembadi Girls' High School
Library
CC 89
DATE: 09 NOV 2009

துளி – 8

இன்ரறக்ட் கழகம்

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

யாழ்ப்பாணம்.

INTERACT SONG

Let every good person give three heartily cheers
Vive La Interact.

To carry our message of love without tears
Vive La Interact.

Vembadi Girls' High School
89
09 NOV 2009

Chorus :- Vive La Interact
Truth is our right
Love is our might
Vive La Interact

When something is wrong lets straighten out
Vive La Interact
For nothing is worse than a fear or doubt
Vive La Interact.

(Repeat Chorus)

The grooming of tomorrow's leaders we claim
Vive La Interact
Let's carry on service with fame to out name
Vive La Interact.

(Repeat Chorus)

INTERACT INVOCATION

Instill in us O' lord the true meaning of friendship.

Never let us forget the we are the children.

That the differences of cultures and creeds should not matter.

Endow us with Service desire to Serve our fellow men.

Remembering that we too often need help.

At all times when the need for Service arises.

Carrying our badge of interact worthwhile.

Tell us we have not lived in vain.

துழத்து கொண்டிருப்பவை

1. அதிபரின் ஆசிச்செய்தி
2. பொறுப்பாசிரியரின் வாழ்த்து
3. தலைவரின் உள்ளத்தில் இருந்து .....
4. நிர்வாக குழு உறுப்பினர்கள்
5. கழக அங்கத்தவர்கள்
6. செயற்றிட்ட அறிக்கை
7. நம் வரிகள் .....
    * இன்ரறக்ட் கழகம்
    * இன்ரறக்ட் கழக நியம் யாப்பு
    * சின்னத்திரையும் மங்கையர் வாழ்வும்
    * நாளைய உலகு நம்கையில்.....
    * Ict Short cut words
    * சினிமா துறை.....
    * பெண்ணே உனக்காக.....
    * சிந்தனை துளிகள்
    * மற்றவர்களிடம் பேசுவது எப்படி....
    * What is history?
    * நசமான ராத்திரிகள் ரசனையோடு
    * நேரத்தின் மதிப்பு
    * வாழ்வில் மூன்று
    * விழிப்பூட்டும் சர்வதேச பிரகடனங்கள்
    * Health is wealth
    * உலகில் புகழ்பெற்ற நூல்களும் அதனை எழுதியவர்கள்
    * சிரிக்க சில நகைச்சுவைகள்
    * தேடல்....
8. அயல்நாட்டு பழமொழிகள்
9. இவர்கள் எமது அனுசரனையாளர்கள்
10. நன்றியுடன் நான்

அதிபரின் ஆசிச் செய்தி.....

எமது கல்லூரியின் இன்ரறக்ட் கழகமானது வருடா வருடம் தமது சேவையைப் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் ஆற்றி வருகின்றது. சேவை கழகங்களில் ஒன்றாக விளங்கும் இக் கழகம் பல்வேறு செயத்திட்டங்களை முன்னெடுத்து "துடிப்பு" எனும் சஞ்சிகையையும் வருடா வருடம் வெளியிடுகின்றது. பல சுவை நிரம்பிய மாணவர்களின் கற்பனையில் உதித்த பல ஆக்கங்களைக் கொண்டதாக விளங்கும் இம் மலர் மாணவர்களது திறமைகளை வெளிக்கொணரும் ஒரு சாதனமாக அமைகிறது. இந்தப் பெறுமதியான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் கழக பொறுப்பாசிரியர்களையும் துடிப்புடன் இயங்கும் கழக உறுப்பினர்களையும் பாராட்டுவதுடன் அவர்களது சேவை மேலும் சிறந்ததோங்குவதற்கு ஆசியையும் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

VEMBADI GIRLS' HIGH

- அதிபர் -
திருமதி க. பொன்னம்பலம்

பொறுப்பாசிரியரிடமிருந்து.....

காலத்தின் வேகத்திலும் தன் கோலத்தின் எழில் சிறிதும் குறையாது நின்று சீலத்தையும், சீர்மிகு கல்வியையும் சிறப்புடனே புகட்டிவரும் போது கல்லூரியின் இன்ரறக்ட் கழகமானது தனது எட்டாவது இதழாக துடிப்பை வெளியிடுவதையிட்டு மிகுந்த பெருமையடைகின்றேன்.

சேவையே நோக்கமாக இயங்கும் எமது கழகம் அங்கத்தவர்களது ஆக்கத்திறன்களை சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் இவ் இதழை வெளியிட்டுள்ளது.

தன்னலமற்ற பணியினை ஆற்றிவரும் எமது மாணவர்களின் முயற்சிக்கு எனது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் அவர்களின் பணிகள் மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

நன்றி

.....

திருமதி.ந.தவசீலன்
பொறுப்பாசிரியர்

தலைவரின் உள்ளத்திலிருந்து

எமது கல்லூரி மாணவர்கள் கல்வி, விளையாட்டு, இணைப்பாட விதான செயற்பாடுகள் போன்றவற்றில் மட்டும் நின்றுவிடாது சேவையாற்றுவதிலும் தம்மை இணைத்து அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றனர். அந்தவகையிலே எமது கல்லூரி மாணவர்கள் இன்ரறக்ட் கழகத்தில் இணைந்து தம்மை சேவையில் அர்ப்பணித்து வருகின்றார்கள்.

எமது கழக மாணவர்களின் திறமையை வெளிக்காட்டும் வகையில் வருடாந்தம் எமது கழகத்தினால் வெளியிடப்படும் "துடிப்பு இவ்வருடமும் எம் மாணவியரின் எழுத்தாற்றலால் உதிப்பதை இட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன் எமது மாணவரின் தன்னலமற்ற சேவையும் அவர்களின் ஆக்க திறனும் மென்மேலும் வளர இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

தலைவர்

Int நிருபா சந்திரசேகரம்

2010 Arts [A]

"தன்னலமற்ற சேவையே எமது பணி"

2009 – 2010 ஆண்டிற்கான நிர்வாக குழு உறுப்பினர்கள்

பொறுப்பாசிரியர் -		திருமதி ந.தவசீலன்
		திருமதி லோ.மதிஅமுதன்
		செல்வி உ.சிவகுருநாதன்
தலைவர்	- Int	நிரூபா சந்திரசேகரம்
உபதலைவர்	- Int	கீதாஞ்சலி கந்தையா
செயலாளர்	- Int	நிரோசினி குபேந்திரன்
உபசெயலாளர்	- Int	விதுர்ஷா குபேந்திரதாஸ்
பொருளாளர்	- Int	லதா கோபாலசிங்கம்
இதழாசிரியர்	- Int	தனுஜா தர்மேந்திரன்
	- Int	தர்சிகா சிவனேசன்
	- Int	சுபத்திரா நாதன்
இயக்குனர்கள்	- Int	கௌசிகா சூரியகுமார்
	- Int	பைரவி ஏகாம்பரபதி
	- Int	நிசாந்தி தங்கராஜா
	- Int	ஆரதி அரசரட்ணம்
	- Int	சிவலோஜிதா பாக்கியராஜா

2009 ஆம் ஆண்டிற்கான கழக உறுப்பினர்கள்

1.	Int	நிரூபா.ச
2.	Int	கீதாஞ்சலி.க
3.	Int	நிரோசினி.கு
4.	Int	விதுர்ஷா.கு
5.	Int	லதா.கோ
6.	Int	தர்சிகா.சி
7.	Int	கௌசிகா.சூ
8.	Int	பைரவி.ஏ
9.	Int	சுபத்திரா.நா
10.	Int	சுயந்தினி.கு
11.	Int	பவித்திரா.த
12.	Int	கீதாஞ்சலி.ரி
13.	Int	நிசாந்தி.த
14.	Int	மெடோன் ஆன்சியா.மு
15.	Int	தேனுகா.பு
16.	Int	சிவலோஜிதா.பா
17.	Int	பார்த்தீபா.மு
18.	Int	ஜனகா.ச
19.	Int	சபேகா.ஜ
20.	Int	தட்சாயினி.ஸ்ரீ
21.	Int	வினோஜா.இ
22.	Int	தனுஜா.த
23.	Int	துஷானி.இ
24.	Int	ஆரதி.அ

25. Int சுகன்யா
26. Int வித்தகி.ஏ
27. Int சுதர்சிகா.ஸ்ரீ
28. Int கனகதுர்க்கா.க
29. Int பகீரதி.க
30. Int மதிவதனி.கு

எமது கழகத்தின் செயற்பாடுகள்

1. தினமும் பாடசாலையில் உள்ள Sick room இனை பராமரித்தல்.
2. தினமும் பாடசாலை தம்பையா மண்டபத்தினை பராமரிப்பு செய்தல்.
3. பாடசாலையில் நடைபெறும் ஆங்கில தினவிழா, தமிழ்தினவிழா, விளையாட்டுப்போட்டி, நிறுவுனர் தினவிழா ஆகியவற்றின் போது உணவு பரிமாறல்.
4. வீதி போக்குவரத்து சேவை எமது கழகத்தாஸ் சிறப்பாக இடம்பெறுகின்றது.
5. வைத்தியசாலை இரத்த வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் எமது கழக மாணவர்களும் கலந்து கொண்டனர்.
6. 11.02.2009 அன்பளிப்பு (சிவபூமி இல்லம் 500/=)
7. 15.02.2009 அன்பளிப்பு (அகதிகள் முகாமை 2000/=)
8. 05.05.2009 அன்று அகதிகளுக்கான எமது கழகத்தினால் 21500/= நிதி சேகரித்து கொடுக்கப்பட்டது.
9. 01.06.2009 அன்று கைதடி முகாமில் உள்ள மாணவர்களுக்கு எமது கழகத்தினால் சிற்றூண்டி வழங்க 5000/= நிதி ஒதுக்கப்பட்டது.

இன்ரறக்ட் கழகம்

- உலகத்திலே முதலாவது Interact club ஆனது 1962ம் ஆண்டு 11ம் மாதம் 5ம் திகதி America வி லுள்ள மெல்போர்னின் உயர்தரப் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

- ஆரம்பத்தில் 23 அங்கத்தவர்களுடனேயே Interact club ஆரம்பிக்கப்பட்டது.

- ரோட்டரிக் கழகமானது தனது சேவையைப் பாடசாலை மாணவர்களிடையே பரப்பும் பொருட்டே இன்ரறக்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

- தற்போது 7492 கழகங்களும் 167716 உறுப்பினர்களும் கொண்டதாக காணப்படுகிறது.

- இலங்கையில் முதன் முதலாக யாழ்ப்பாணத்திலேயே இன்ரறக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

- 1964ம் ஆண்டு இக்கழகம் முதலில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

- பெண்களுக்கான முதல் இன்ரறக்ட் கழகம் முதலில் இலங்கையில் திருகோணமலையில் உருவாக்கப்பட்டது.

Latha.A

2010 Bio [A]

Standard Interact Club Constitution

இன்ரறக்ட் கழக நியம யாப்பு

நோக்கம் :–

சேவை சர்வதேச புரிந்துணர்வு என்பவற்றிற்கான அர்ப்பணிக்கப்பட்ட உலக நட்புறவில் இணைந்து செயற் படுவதற்காக இளைஞர்களுக்கு சந்தாப்பம் வழங்குவதனைப் பிரதானமான நோக்கமாக இன்ரறக்ட் கழகம் கொண்டுள்ளது.

இலக்கதுகள் :–

இன்ரறக்ட் கழகம் பிதரானமாக 08 இலக்குகளைக் கொண்டுள்ளது.

1. ஆக்கபூர்வமான தலைமைத்துவம்.
2. பரிவு, பிறர்க்கு உதவும் தன்மை என்பவற்றை ஊக்குவித்தலும் கடைப்பிடித்தலும்.
3. வீடு, குடும்பம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
4. தனிமனிதனுடைய பெறுமதியை அங்கீகரிப்பதன் அடிப்படையில் பிறரின் உரிமைகளுக்குரிய கௌரவத்தை வளர்த்தெடுத்தல்.
5. சொந்த வாழ்க்கையில் வெற்றி, சமுதாய முன்னேற்றம் குழுவாக இயங்குகையால் ஈட்டும் சாதனை என்பவற்றின் அடிப்படையாக தனிமனித பொறுப்புணர்வை ஏற்றுக் கொள்ளுதலை வலியுறுத்தல்.
6. சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் என்ற வகையில் எல்லா வகையான தொழில்களுடைய தரத்தையும் பெறுமதியையும் மகத்துவத்தையும் அங்கீகரித்தல்.

7. சமுதாய் சர்வதேச விகாரகங்கள் பற்றிப் பரந்த அறிவையும் புரிந்துணர்வையும் பெறுவதற்கான சந்தாப்பங்களை வழங்குதல்.
8. சகல மக்களினதும் மீதான சர்வதேச புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் முன்னெடுப்பதற்கேற்ற வகையில் தனிமனித, குழு ரீதியான நடவடிக்கைகளுக்கு வழிகோலுதல் வேண்டும்.

அங்கத்துவம் :-

1. பாடசாலை மட்டத்திலான கழகத்தில் ஒருவர் அங்கத்துவராக சேர விரும்பின் அவர் நல்லொழுக்கத்தையும் தலைமைத்துவ வளத்தையும் கொண்டவராக இருப்பதோடு இடைநிலைக் கல்வி பயிலும் மாணவராக அல்லது 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவனாக இருத்தல் வேண்டும்.
2. இக்கழகத்தின் அங்கத்தவர்கள் எல்லோரும் ஆண்களாகவோ / பெண்களாகவோ / இருபாலரும் சேர்ந்தவர்களாவோ அமையலாம்.
3. இக்கழகத்தின் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகம் முடிவு செய்தல் வேண்டும். இத்தேர்வு முறைக்கு பாடசாலை நிர்வாக அங்கீகாரம் இருத்தல் வேண்டும்.
4. ஒழுங்காக அட்டவணைப்படுத்தப்பட்ட கூட்டங்களில் குறைந்தது 60% இற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் சமூகமளிக்க வேண்டும்.

அங்கத்தவர் ஒருவர் :–

1. பாடசாலை விட்டு விலகும் போது
2. கழகத்தைக் கலைக்கும் போது
3. தேவையான காரணங்களுக்காகப் பணிப்பாளர் சபையினால் மன்னிக்கப்பட்டாலன்றி கூட்டங்களுக்கு சமூகம் கொடுப்பது தொடர்பான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யமுடியாத போது அங்கத்துவம் இக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும்.
4. இக்கழகத்தில் ஒருவரின் அங்கத்துவம் இக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும் காரணங்களுக்காக மொத்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத பெரும்பான்மையுடன் வாக்கெடுப்பு மூலம் நீக்கப்படலாம்.

கூட்டங்கள் :–

1. பாடசாலைக்குட்டுப்பாடுகளுக்கு அமைவாக அங்கத்தவர்களின் வசதிக்கேற்ப உபவிதிகளில் குறிப்பிட்டபடி குறித்த ஒரு நேரத்திலும் இடத்திலும் மாதத்திலும் இரண்டு தடவைகளுக்கு குறையாமல் இக்கழகம் கூடவேண்டும்.
2. உபவிதிகளில் குறிப்பிட்டபடி இயக்குநர் சபை கூட வேண்டும். அனுசரணையாக விளங்கும் றோட்றிக் கழகத்தின் இன்ரறக்ட் குழுவின் உறுப்பினர் ஒருவரின் பிரசன்னமின்றி இயக்குநர் இயக்குநர் சபையின் எந்தக் கூட்டமும் உத்தியோக பூர்வமானதாக அமையாது.
3. அனுசரணையாக விளங்கும் றோட்டறிக் கழகத்தின் அனுமதியுடன் விடுமுறை நாட்கள் தவணை விடுமுறைகளில் கழகத்தினதும், இயக்குநர் சபையினதும் கூட்டங்கள் இரத்துச் செய்யப்படலாம்.

யாப்பையும் உபவிதிகளையும் ஏற்றுக்கொள்ளல் :-

இக்கழகத்தின் ஒவ்வொரு அங்கத்துவரும் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டு அத்துடன் அங்கத்தவராக தொடர்ந்து இருப்பதன் மூலம் இன்ரறக்ட் கழகத்தின் நோக்கும் இலக்குகளும் என்பதால் வழிப்படுத்தப்பட்டுள்ளவாறு இன்ரறக்ட் கழகத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொள்கின்றார் என்பதோடு இக்கழகத்தின் யாப்பையும் உபவிதிகளையும் ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்கி ஒழுகச் சம்மதிக்கிறார் என்ற இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இக்கழகத்தின் சிறப்புரிமைகளுக்கு ஒருவர் உரித்துடையவராகிறார்.

* தமக்கு யாப்பின் ஒரு பிரதி கிடைக்கவில்லை என்று கூறிக்கொண்டு யாப்பையும் உபவிதிகளையும் கடைப்பிடித்து எழுவதிலிருந்து எந்த உறுப்பினரும் தவறக்கூடாது.

Latha.A

2010 Bio [A]

சின்னத்திரையும் மங்கையர் வாழ்வும்

வெள்ளித்திரையில் கண்ட முகங்களை
சின்னத்திரையில் காணத்தவறாத பெண்களின் வாழ்வு
சீரியல் எனும் பாரிய சக்கரத்தில் சுழன்று
சிதறிக்கிடக்கிறது பாரம்மா!

மணி பத்தாகும் போது மங்கைகளின்
மனங்களில் வசந்தம் வருகிறது
குடும்பத்தில் வராத வசந்தம் - இன்று
முப்பது நிமிடங்களில் சின்னத்திரையில்.....

மணி பத்து முப்பதாகும் போது மங்கையர்க்கு
புதிய சக்தி வந்துவிடுகிறது
வருவது யாதெனில்; சின்னத்திரையில்
வரும் சிவசக்தி!

என்னதான் சீரியல் பார்த்தாலும்
விளம்பர இடைவேளைகளில்
கொஞ்சம் கொஞ்சமாக சமையலும் தயாராகிறது
சீரியல் நேரத்தைவிட விளம்பர நேரம் அதிகம் அல்லவா?

மணி பதினொன்றாகும் போது மனம் தேடுகிறது
காணாமல் போன மேகலாவை!
குடும்பத்திலிருந்து தொலைந்த உறவல்ல - இவள்
சின்னத்திரை நாயகி மேகலா!

மணி பதினொன்று முப்பதாகும் போது
காதோராமாய் கேட்கிறது
கஸ்தூரி...ஓ....ஓ கஸ்தூரி - இவள்
இன்றைய மங்கையரின் கிராமத்து தோழி!

மதிய நேர சீரியல்கள் பன்னிரண்டுடன் நிறைவடைய
மாலைநேர சீரியல் ஆறுமுப்பதிற்கு ஆரம்பம்
கண்கள் தேடுகிறது அபியின் அழகான கோலங்களை
அவளது கோலங்களைப் பார்த்து - இன்று
பல மங்கைகள் வாழ்வு அலங்கோலமானதுண்டு.

மணி ஏழாகும் போது மங்கைகள்
மனங்களெல்லாம் மகிழ்கின்றது
ரம்யாவை தங்கத்தில் காண்பதற்காக;
தங்கம் ஜொலிக்காவிடினும் - இந்த
நங்கையர் முகங்கள் ஜொலிக்கத்தான் செய்கிறது!

மணி ஏழு முப்பதாகும் போது குடும்பத்தை
மறக்கும் பெண்கள் எத்தனைபேர்?
இவர்கள் நம்ம குடும்பத்தில் இணையும்
ராதாவின் புதிய உறவுகளாகின்றனர்.

மணி எட்டாகும் போது இரவு உணவால்
வயிறு நிரம்பிவிட
சரியாக எட்டு முப்பதாகும் போது உணவு ஜீரணிக்க
கம்பீரமாக அரசி வந்திடுவாள்.

செய்திகளுக்குப் பின் மீண்டும் தொடரும் சீரியல்
கல்யாணம், முடிந்ததும் திருமதி செல்வம்
இந்தச் சீரியல்கள் பாதித்த திருமதிகளால் - பல
குடும்பங்கள் நிம்மதியின்றி தவிப்பது நிஜமே!

சீரியலில் மூழ்கி சீர்குலைந்திருக்கும்
இன்றைய இல்லத்து மங்கையரை
சீர்திருத்த நல்லதோர் புதுமைப் பெண்
இப்பூமிக்கு வரும் நாள் எதுவோ.....?

ஆக்கம் :- பா.சிவலோஜிதா
2010 கலைப்பிரிவு
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

நாளைய உலகு நம்கையில்

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" இந்தப் பரந்துபட்ட பிரபஞ்சத்தை ஆளப்போகின்றவர்கள். எதிர்கால உலகம் சாந்தி, சமாதானம், ஆன்மீக ஒருமைப்பாடு மிக்கதாக திகழவைக்கும் பொறுப்பு சிறுவர்களாகிய நம் கையில் உள்ளது. சிந்தித்துப் பாருங்கள் சில நிமிடம்!. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்றும் [illegible] நம் மூத்தோர்கள் தம் அனுபவ வாயிலாக கூறியுள்ளனர். சிறுவர்களாகிய நாம் சிறுவயதில் பழகும் பழக்கங்களே வாழ்க்கை முழுவதும் எம்மோடு வரப் போகின்றது. அந்த வகையில் நாம் நல்ல பழக்க வழக்கங்களை இந்த வயதில் பழக்கப்படுத்திக் கொள்ள முடியாதவிடத்து நம் எதிர்கால வாழ்வு கேள்விக் குறியாகவே காணப்படும். தனிமனிதன் தன்னைத் தான் திருந்தாதவிடத்து உலகம் திருந்தப் போவதில்லை.

இன்றைய காலகட்டத்திலே சிறுவர் உரிமைகள் பறிக்கப்பட்டு, துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டு துயர் அடைவது போன்று எம் சந்ததியினரும் துயர் அடையக்கூடாது. எதிர்காலம் சாந்தி, சமாதானம் ஆன்மீக ஒருமைப்பாடு பெற்றுத் திகழவைப்பது நம் போன்ற சிறுவர்களின் கைகளாலே தங்கியுள்ளது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்றார் ஒரு கவிஞர் ஆம்! ஒரு குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பில் தான் தங்கியுள்ளது. அது மட்டுமல்லாது பிள்ளை வளரும் சமுதாயமும் காரணமாகும். சிறுவர்களே சிந்தித்தீரா? பறவைகளைப் பார்த்தான்

விமானம் படைத்தான் மீனைப் பார்த்தான் கப்பல் கண்டு பிடித்தான். சிறுவயதில் சந்திரன் வேணும் என்றவன் ஈற்றில் சந்திரனுக்கே போய் வந்தான். அவர்களால் முடிந்தது. ஏன் நம்மால் முடியாது? இறைவன் மனிதர்களுக்கு ஒரே அமைப்பான உடலைத் தந்தான். மூளையைத் தந்தான். ஏன் அதனைப் பயன்படுத்த முடியவில்லை. சோம்பிக்கிடந்தால் வெற்றி எம்மைத்தேடி நாடி வராது. நாம் வெற்றியை தேடி ஓட வேண்டும்.

ஏன் தற்போது கூட நாம் அமெரிக்காவின் கோதுமை மாவை நம்பி இருக்கும் ஜீவன்கள் என்று ஏன் இந்த நிலமை? பெரியோர்களே நீங்கள் அன்றுவிட்ட தவறுகள் தவறான சிந்தனைப் போக்குகள் இன்று சிறுவர்களாகிய எம்மைப் பாதிப்பதையும் எம் எதிர்காலம் கேள்விக் குறியாய் இருப்பதையும் உணர்வீரா? இன்றைய சிறுவர்கள் உடல் ரீதியாயும், உளரீதியாயும், ஏன் பாலியல் ரீதியாயும் துஸ்பிரயோகிக்கப்பட்டு ஆபத்தான் கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிவீரா? சிந்தித்துப் பாருங்கள். மண்ணிற்காக அடிபடும் மாந்தர்களே நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கும் போது ஆறடி மண்ணிற்குள் உம் கதை அடங்கிவிடும் என்பதை உணர்வீர்களா?

வேதனைகளின் மத்தியிலும் சாதனை படைத்த இளஞ்சிட்டுக்கள் எத்தனையோ? சிறுவர்களாகிய நாமும் தவறான சிந்தனைப் போக்குடன் வாழ்வோமானால் எதிர்கால எம் சந்ததியும் எம்மைக் கேள்வி கேட்கலாம். அகந்தை எம்மை ஆக்கிரமிக்கின்றது. இதை அறியாதார் பொருள் தெரியாது நகைகின்றார். சிறுவர்களே நீர் இன்று சிந்திக்காவிடின் நாளைய வாழ்வு சிதறிப்போம்.

சிறுவர்களே தோல்வியைக் கண்டு துவளாதீர். அதுவே வெற்றியின் முதல்படி என்பதை மறாவதீர் எப்போதுமே கீழ் மட்டத்தில் இருந்து தான் மேல் மட்டத்திற்கு போகவேண்டும். அதுவே நிலையானது என்பதை நினைவில் கொள்க. ஒரு மலையுச்சியை அடைய பல பாதைகள் காணப்படுகின்றது. எந்தப் பாதையில் சென்றாலும் நாம் அடையும் உச்சி ஒன்றே. அது போலவே ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு பாதைகளைப் போன்றவை. நாம் அடையும் இறைவனும் ஒன்றே. ஆகவே நாம் எல்லோரும் இறைவனின் குழந்தைகள் என நினைப்போமாயின் எதிர் காலத்தில் சாந்தி, சமாதானம், ஆன்மீக ஒருமைப்பாடு நிறைந்த இன, மத, பேதமற்ற சிறந்த நாட்டைக் கட்டி எழுப்பி நாட்டில் நற்பிரயைகளாகத் திகழ்வோம்.

இறைவனின் குழந்தைகள் நாமேதான்
இந்த உலகமும் எம்கையில்
துணிவுடன் வாழ்ந்து நாம்
புதிய சாதனைகள் படைப்போம்

நிரோசினி – குபேந்திரன்
2010 Arts[A]
வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை

ICT SHORT CUT WORDS

GAN	Global Area Network
GUI	Graphical user Inter face
HAN	Home Area Network
HDD	Hard Disk Drive
HGA	Hercules Graphic Adapter
HIPO	Hierarchy of Input processing and out put
HRIS	Human Resource Information system
IBM	Hyper Text Transfer protocol
IC	International Business Machine
IMAP	Integrated Circuit
ISDN	Internet Mail Access protocol
ISP	Integrated Services Digital Network
IT	Information Technology
LAN	Local Area network
LCD	Liquid Crystal Display
LD	Low Density
LISP	Listing Processing
LPM	Liner Per Minute
LQ	Letter Quality
LSI	Large Scale Integration
MAN	Metropolitan Area Network
MIME	Multimedia Internet Extension

MIPS	Million Instruction Per Second
MIS	Management Information System
MPEG	Motion Prictore Expert Group Video Decompression
MPU	Micro Processing Unit
MSDOS	Micro Soft Disk Operating system
MSI	Medium Scale Integrated Circuits
MIBF	Mean Time Between Failures
NLQ	Near Letter Quality

K.Keethansaly

2010 Arts B

சினிமாத்துறை

- பிரான்ஸ் நாட்டை சேர்ந்த லூமியர் சகோதாரர்கள் 1895 ஆம் ஆண்டு தொழிற்சாலை ஒன்றிலிருந்த தொழிலாளர்கள் புகையிரத நிலையத்திற்கு புறப்படும் காட்சியை படமாக்கியதன் மூலம் சினிமாவின் உருவாக்கத்திற்கு காரணமானவர்களாக கருதப்படுகின்றனர்.
- உலகின் சினிமா நூற்றாண்டு விழா நிகழ்வுகள் 1995 இல் இடம்பெற்றன.
- இலங்கையின் பொன்விழா சினிமா நிகழ்வுகள் 1997 இல் நடைபெற்றன.
- OSCAR சினிமாத்துறையில் வழங்கப்படும் உயர் மதிப்பு மிக்க விருதாகும்.
- சரசவிய - இலங்கை அரசினால் சினிமா கலைஞர்களுக்கு வழங்கப்படும் உயர் மதிப்பு மிக்க விருதாகும்.
- நாஸ்பெரி – உலகில் வெளியாகும் மோசமான திரைப்படங்களுக்கு வழங்கப்படும் விருதாகும்.
- இலங்கையில் வெளியான
  முதலாவது மௌனபடம் - ராஜதீய விக்கிரமய
  முதலாவது சிங்களபடம் - கடவுள் பொறந்துவ
  முதலாவது தமிழ்ப்படம் - சமுதாயம்
  முதலாவது ஆங்கிலப்படம் - Bridge on the River duai
- சிம்பனி எனும் உலகின் உயர்ந்த இசை வடிவத்தை 1993 ஆம் ஆண்டு தென்னிந்திய இசையமைப்பாளரான இளையராஜா அமைத்தார்

- Benhur எனும் படம் 1959 இலும் Titanic எனும் படம் 1998 இலும் OSCAR விருதுகளை பெற்று ஆகக்கூடிய OSCAR விருதுகளை பெற்ற படங்களாக விளங்குகின்றன.
- தமிழில் முதன் முதலில் வெளியான முப்பரிமான 3D படம் மைடியர் குட்டிச்சாத்தான்.
  முதல் பேசும் படம் - காளிதாசன்
  முதல் வர்ணபடம் - அலிபாபாவும் நாற்பது திருடர்களும்
- கலைத்துறைக்கும் பிரான்ஸ் நாட்டினால் வழங்கப்படுகின்ற உயர் விருது செவாலியர் விருது பிரான்ஸ் சக்கரவர்த்தியாக திகழ்ந்த மாவீரன் நெப்போலியன் போன பார்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது இவ்விருதை தென்னிந்திய தமிழ் சினிமா நடிகர் சிவாஜி கணேசன் 1995 இல் பெற்றார்.

சுபத்திரா நாதன்
2010 Arts

Vembadi Girls' High School
Library
09 NOV 2009

பெண்ணே! உனக்காக!

அடுப்படியும்
அகப்பைச் செங்கோலும்
தான் - உன்
அற்புத ராய்ச்சியமா?
அதைத் தாண்டி
அறிவுப் பெட்டகத்தைத்
திறந்து பார்!
சமூகச் சாக்கடையில்
சுகித்திருக்கும்
சாக்கடைப் பூச்சியல்ல – நீ
சரித்திரம் படைக்க வேண்டியவள்
பெண்ணுக்குப் பொறுமை வேண்டும்
புழுப்போல்ல! பூமாதேவி போல்!!
ஆடிமையாய் இரு! அராஜகத்திற்கும் அத்துமீறல்களுக்கும்
அல்ல! அன்புக்கு மட்டும்!!
சம உரிமை வேண்டாம் உனக்கு!
இருக்கும் உரிமைகளை இழந்து விடாதே!
கற்பு உனக்குக் கடிவானம் அல்ல
அதைக் கவசமாக்கிக் கொள்!
வழிபடுவோர்க்கு வசமாய்
விழி வீசுவோர்க்கு
வேலாய் இருந்து!!!

தனுஜா.த
2010 Maths

சிந்தனைத் துளிகள்

1. வாழ்க்கையின் உண்மையான தத்துவம் குழந்தைதான் இழந்த நாளையும் இருக்கும் நாளையும் இணைப்பவர்கள் அவர்கள் தான்.
2. ஆசை புத்தியை மறைக்கும் போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது.
3. பணம் பேசத் தொடங்கும் போது உண்மை ஊமையாகிவிடும்.
4. ஒரு போதும் தவறு செய்யாதவன் ஒன்றுமே செய்யமாட்டான்.
5. வீரம் விலை போகாது, விவேகம் துணை போகாவிட்டால்
6. விருப்பம் நிறைவேறாத போது தான் ஒருவரின் குணம் வெளிப்படும்.
7. சண்டையின் போது சத்தியம் அடிபட்டுப் போகிறது.
8. ஆடம்பர வாழ்க்கை அடிமைத்தனமானது, உழைப்பு கௌரவத்திற்குரியது.
9. விதி விளையாடத் தொடங்கினால் மதி மயங்கிப் போகும்.
10. அமைதியாக எடுக்கும் முடிவுகள் ஆனந்தமாகவே இருக்கும், அவசர முடிவுகள் ஏமாற்றத்தையே கொடுக்கும்.
11. உண்மை, கற்பனையைவிட எப்போதும் அதிசயமாகவே இருக்கும்.

12. செல்வம் என்பது பணம் என்பதில்லை எதில் மனம் நிறைவுறுகிறதோ அதுவே செல்வம்.
13. வார்த்தையில் மட்டும் பணிவு இருந்தால் போதாது நடத்தையிலும் இருக்க வேண்டும்.
14. நல்ல சூழ்நிலைகளே மனிதனது சுகத்திற்கு முதற்படி.
15. அகக் கண்ணை திறந்து விடும் ஆசிரியர் இளம் பருவத்திலே கிடைக்க வேண்டும்.

துஷானி.இ
2010 Maths

சுறுசுறுப்பாக இரு – ஆனால் பட படப்பாக இராதே
பொறுமையாக இரு – ஆனால் சோம்பலாக இராதே
சிக்கனமாக இரு – ஆனால் கருமியாக இராதே
அன்பாக இரு – ஆனால் அடிமையாக இராதே
இரக்கம் காட்டு – ஆனால் ஏமாந்து போகாதே
கோடையாளியாக இரு – ஆனால் ஓட்டாண்டியாகாதே
நல்லோரை நாடு – ஆனால் அல்லோரை வெறுக்காதே

மற்றவர்களிடம் பேசுவது எப்படி

தாயிடம் அன்பாய் பேசுங்கள்

ஆசிரியரிடம் பண்பாய் பேசுங்கள்

சகோதரியிடம் அடக்கத்தோடு பேசுங்கள்

குழந்தைகளிடம் ஆர்வமாக பேசுங்கள்

உறவினர்களிடம் பரிவோடு பேசுங்கள்

அதிகாரிகளிடம் பணிவாக பேசுங்கள்

வியாபாரிகளிடம் கறாராக பேசுங்கள்

தொழிலாளியிடம் மனித நோயத்துடன் பேசுங்கள்

அரசியல்வாதியிடம் ஜாக்கிரதையாக பேசுங்கள்

நண்பர்களிடம் பணிவாக பேசுங்கள்

கடவுளிடம் மரியாதையாக பேசுங்கள்

(புரிந்து பேசுங்கள் புரியும் படி பேசுங்கள்)

நிரூபா.ச

2010 ArtsA

WHAT IS HISTORY

The word "History" is derived from Greek term "ISTORIA". ISTORIA means result obtained by experiments. It is the studying of he past. Herodotus is considered as father of History first of all he used the word "ISTORIA" what is History? No one gave complete definition to this but many Historians put forward their opinions. The opinions about History by Historians are give below.

"History means learning about period of humanity from past to present"

START PIGGOTT

"History is everlasting conversation between past and present"

C.H. Carr

"Human history is the history of ideologies"

H.G Wells

"History is not only an isolator subject mix tare of all other subjects"

Traveling

"History is defined as systematic account of origin and progress of a nation its impact on study of past

Ratnam sir

Sujanthini.K.

2010 Arts^{A}

ரசமான ராத்திரிகள் ரசனையோடு

விளையாட்டுச் சிறு வயதில்
வித்தைகள் பல புரிந்து
பாடசாலையில் பதக்கம் பெற்று
பாங்கினோடு தோழிக்கு கூறி
எனது பெருமையை நானே நினைத்து
பூரித்த பாராட்டு ராத்திரி

ஊர்ச்சிறுமியோடு ஒளிந்து விளையாட
ஆளில்லா வீடொன்றின்
அடுக்களையில் நானொழிய
ஓட்டிலிருந்தபல்லி என்மேல் விழ
ஓடி வந்து என்னை நானே காட்டிக்கொடுத்து ந
ஆசட்டு ராத்திரி

அத்தை வீட்டில் கடன் கேட்க
அப்பா அனுப்பி வைக்க
அத்தை மகன் பார்த்த அதிர்ச்சியில் வெட்கமுற்று
கடன் என்ற வார்த்தையை
கடைசி வரை சிரிப்பில் புதைத்துவிட்ட
அரைநொடியும் தூங்காத அவமான ராத்திரி

மூத்த கிழவன் சாக
முதற் சாவு நான் பார்க்க
எள்ளில்லாமல் சுற்றும் செக்கைப்போல்
கண்ணீரில்லாமல் பெண்கள் அழ
உயிர்க்கிழவனை விடவும் பிணக்கிழவன் அழகென்று
சந்தோஷப்பட்ட சாவு ராத்திரி

வேம்படி என்னும் பாடசாலை சோலைக்குள்
நுழைவதற்கு முதல் நாள்!
வளர்த்த ஆரம்பப் பாடசாலையே வாழ்த்திய ஆசிரியரே
போகிறேன் எனப் புலம்பி புலம்பி
நட்சத்திரங்களை நினைத்த
கண்ணீர் ராத்திரி

ஒரு கிளியைப் போல் பறந்துவந்த
பிரிந்து போன நண்பியின் கடிதத்தில்
காற்புள்ளியிலும் அரைப்புள்ளியிலும்
நட்பை தரிசித்த நயமான ராத்திரி.

சூப்பரான சூர்யாவின் பாட்டை
ஒலிப்பதிவு செய்து ஓடோடி வந்த
உடம்பெல்லாம் செவியாக உயிரெல்லாம் ரூசியாக
என்னையே மறந்து எண்பதுமுறை
ஒருவரி விடாமல் செவிமடுத்த
இன்னிசை ராத்திரி

பாடசாலையின் கடைசிநாள்
இறுதிமணி ஒலிக்க
மனதெல்லாம் மறுப்பின்றி ரணமாக
கண்களெல்லாம் கண்ணீர் மழை தூவ
தோழிகளின் தோளோடு தலை சாய்ந்து
சத்தமிட்டமுதல்பிரிவு ராத்திரி

இப்படி இன்ன பிற ராத்திரிகள் இருந்தாலும்
மனதிலின்னும் மையங்கொண்டிருப்பது
பரீட்சைக்கு முதல் நாள் அன்று
அவசரத்தில் அறியாமையில்
தூங்க மறந்துபோன அச்சராத்திரி!

சி.தர்சிகா A/L (2010)

நேரத்தின் மதிப்பு

- ஒரு வருட த்தின் மதிப்பு என்னவென்று பரீட்சையில் தோல்வியடைந்த ஒரு மாணவனைக் கேளுங்கள்.
- ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று குறைப்பிரசவமான ஒரு தாயைக் கேளுங்கள்.
- ஒரு வாரத்தின் மதிப்பு என்னவென்று ஒரு வாரப்பத்திரிகை ஆசிரியரிடம் கேளுங்கள்.
- ஒரு நாளின் மதிப்பு என்னவென்று அன்று வேலை கிடைக்காமல் போன தினக்கூலி வாங்கும் ஒருவரிடம் கேளுங்கள்.
- ஒரு மணி நேரத்தின் மதிப்பு என்னவென்று சந்திக்க காத்திருக்கும் நண்பர்களைக் கேளுங்கள்.
- ஒரு நிமிடத்தின் மதிப்பு என்னவென்று ரயிலைத் தவறவிட்ட பிரயாணியிடம் கேளுங்கள்.
- ஒரு விநாடியின் மதிப்பு என்னவென்று ஒரு விபத்தில் உயிர் தப்பியவனைக் கேட்டுப் பாருங்கள்.
- ஒரு மில்லி செக்கனின் மதிப்பு என்னவென்று ஒரு ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

விதுர்ஷா.கு

2010 Arts.

வாழ்வில் மூன்று

1. யாராலும் திருட முடியாதது
   கல்வி, அறிவு, ஆற்றல்

2. திரும்பிப் பெற முடியாதது
   வில்லிலிருந்து கிளம்பிய அம்பு
   உடலிலிருந்து பிரிந்த உயிர்
   நாவிலிருந்து வெளிப்பட்ட சொல்

3. மனிதனைக் கீழ்த்தரமாக்கும் செய்கைகள்
   திருட்டு, பொய், புறம்பேசுதல்

4. சகோதரர்களிடையே பகைமையை உண்டாக்குவது
   மண், பெண், பொன்.

5. எப்போதும் துக்கத்திலிருக்கும் - மூன்று நபர்
   பொறாமைக்காரர், சந்தேகப்பேர்வழி, சோம்பேறி

6. எதையும் எதிர்பார்க்காதது
   நேரம், மரணம், மூச்சு

7. மனித வாழ்க்கையில் ஒரே முறைதான் கிடைப்பது
   பெற்றோர், அழகு, இளமை

M.Medone Ansiya
2010 Arts^{A}

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்

ஜனவரி	10	உலக சிரிப்புத்தினம்
ஜனவரி	31	உலகதொழு நோயாளர்தினம்
பெப்ரவரி	14	உலக காதலர்தினம்
மார்ச்	08	சர்தேசமகளிர்தினம்
மார்ச்	15	உலக ஊனமுற்றோர்தினம்
மார்ச்	21	உலக வளதினம்
மார்ச்	22	உலக நீர்தினம்
மார்ச்	23	உலகவளிமண்டலதினம்
மார்ச்	24	உலக கசரோகதினம்
மார்ச்	27	உலக நாடகதினம்
ஏப்ரல்	07	உலக ஆரோக்கியதினம்
ஏப்ரல்	15	உலகநூலகதினம்
ஏப்ரல்	17	உலக இரத்ததினம்
ஏப்ரல்	18	உலக மரபுரிமைதினம்
ஏப்ரல்	22	உலக பூமி தினம்
ஏப்ரல்	23	உலக புத்தகதினம்
ஏப்ரல்	26	உலக பாதிக்கப்பட்ட சிறுவர் தினம்
மே	01	உலக தொழிலாளர் தினம்
மே	02	ஞாயிறு உலக தாய் தினம்
மே	03	உலக பத்திரிகை சுதந்திர தினம்
மே	08	உலக செஞ்சிலுவை தினம்
மே	08	உலக முஸ்லீம் தினம்
மே	12	உலக தாதியர் தினம்
மே	13	உலக அன்னையர் தினம்
மே	15	உலக குடும்ப தினம்

மே	17	உலக தகவல் தொடர்பு தினம்
மே	24	பொதுநலவாய தினம்
யூன்	01	உலக குழந்தைகள் தினம்
யூன்	04	இடக்கு முறைக்கு எதிரான தினம்
யூன்	05	உலக சுற்றுச் சூழல் தினம்
யூன்	17	உலக தந்தையர் தினம்
யூன்	26	போதைப்பொருள் தடுப்பு தினம்
யூன்	27	உலக சலரோகதினம்
யூலை	11	உலக மக்கள் தொகை தினம்
யூலை	28	உலக அகதிகள் தினம்
ஆகஸ்ட்	06	கிறோசீமா அணுகுண்டு தினம்
ஆகஸ்ட்	09	நாகசாகி அணுகுண்டு தினம்
செப்ரெம்பர்	02	உலக தெங்கு தினம்
செப்ரெம்பர்	08	உலக எழுத்தாளர் தினம்
செப்ரெம்பர்	13	தாத்தா,பாட்டி தினம்
செப்ரெம்பர்	16	உலக ஓசொன் தினம்
செப்ரெம்பர்	26	செவிப்புலன் அற்றோர் தினம்
செப்ரெம்பர்	27	உலக சுற்றுலா தினம்
ஒக்ரோபர்	01	உலக சிறுவர் முதியோர் தினம்
ஒக்ரோபர்	03	உலக குடியிருப்பு தினம்
ஒக்ரோபர்	04	உலக விலங்கு தினம்
ஒக்ரோபர்	05	உலக உறைவிட தினம்
ஒக்ரோபர்06	06	உலக ஆசிரியர் தினம்
ஒக்ரோபர்	09	உலக தபால் நிலைய தினம்
ஒக்ரோபர்	10	உலக உள நல தினம்
ஒக்ரோபர்	12	உலக கண்பார்வைதினம்
ஒக்ரோபர்	13	உலக இயற்கை அனார்த்தம்
ஒக்ரோபர்	14	உலக தர தினம்

ஒக்ரோபர்	15	வெள்ளைப் பிரம்பு தினம்
ஒக்ரோபர்	16	உலக உணவு தினம்
ஒக்ரோபர்	17	வறுமை ஒழிப்பு தினம்
ஒக்ரோபர்	21	அயடின் குறை நீக்கல் தினம்
ஒக்ரோபர்	23	உலக இரத்ததான தினம்
ஒக்ரோபர்	24	ஐ.நா தினம்
ஒக்ரோபர்	31	உலக சிக்கன தினம்
நவம்பர்	09	சட்ட சவைகள் தினம்
நவம்பர்	16	உலக பொறுமை தினம்
நவம்பர்	17	உலக மாணவர் தினம்
நவம்பர்	26	உலக சட்ட தினம்
டிசம்பர்	01	உலக எயிட்ஸ் தினம்
டிசம்பர்	10	மனித உரிமை தினம்
டிசம்பர்	23	உலக விவசாய தினம்

Vinoja Rasanayagam

2010 ARTS

GOOD HEALTH HABITS

Health is man's wealth If is a priceless gift that God gives us so we must be careful about our health. What we eat decides how we grow. Hence we should eat whole some nutritious food if we want our body to be healthy and strong. Our food must have all the main nutrients carboy hydrates. Fats proteins vitamins and minerals. Carbo hydrates are our chief source of energy for work and play. They are present in rice flour bread and potatoes sugar is bad for our teeth and can make us fat so we ought to avoid eating too any biscuits sweets pastries chocolates cake and ice cream.

Fast too are another source of energy they are found in butter cheese and cooking oil But too much fat in our diet may cause heart disease. Proteins help to keep our body fit and strong fish, meat and eggs are rich in protein. Vegetarians can get their protein from soya green pears. Dhal and nuts. Vegetarians like lady's fingers beans radish and drumsticks will do us much good. We must eat a sufficient quantity of green leafy Vegetarians like got kola and spinach. They are high in again are good for our eyes mik is the only food for which there is on proper substitute. calcium in milk helps to build strong bones and teeth. So it is a must for growing children fresh fruits are rich in vitamins. So we must take them daily.

We must avoid eating between two main meals lake should drink plenty of water every day It is always good to drink boiled

water. We must take regular exercise in the evening. We must trim our fingernails regularly. Sought to forget the saying "Early to be and early to rise makes a man healthy. Wealthy and wise"

Bavithira. T

உலகில் புகழ்பெற்ற நூல்களும் அவற்றை எழுதியவர்களும்

கீதாஞ்சலி	இரவிந்திரநாத்தாகூர்.
மகாபாரதம்	வேதவியாசர்
அர்த்தசாஸ்திரம்	கௌடில்யர் (சாணக்கியர்)
சாகுந்தலம், மேகதூதம், இருதுவம்சம்	காளிதாசர்
பகவத்கீதை	வேதவியாயர்
இராமாயணம்	வால்மீகி, வசிட்டர்,தமிழில் கம்பர்
சத்தியசோதனை	மகாத்மாகாந்தி
உலகில் ஆகக்கூடிய புத்தகம் எழுதியவர்	உருசவா புரும்
இலியட் ஒடிசி	ஹோமர்
போரும் சமாதானமும்	லியோடால்ஸ்டாய்
தேசங்களின் செல்வம்	அடம்ஸ்மித்
மெயின் காம்ப் எனதுபோராட்டம்	அடோல்வ்கிற்வர்.
1800 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்	கனகசபைப் பிள்ளை
செம்மீன் (மலையாளம்)	தகமி சிவசங்கரப்பிள்ளை
கம்பொலிய, ஹாகய	மார்பின் விக்கிரமசிங்க
மகாவம்சம்	மகாநாம தேரோ
சூளவம்சம்	தர்மகீர்த்தி தேரோ
ருபையாத்	உமர்கயாம்
ஒத்தெல்லோ, வெனிஸ்வணிகன்	வில்லியன் செக்ஸ்பியர்
புரட்சியப் புரட்சி	நோமஸ் கார்லைன்
கலிவரின்	யோகநாதன் சுவிப்பற
ரொபின்சன் குருசோ	டானியலு டிபோ (F)
காஸ்கபிடல்	கால்மாகிஸ்
அர்த்தமுள்ள இந்து மதம்	கவிஞர் கண்ணதாசர்

நிர்த்திகா.ச

சிரிக்க சில நகைச்சுவைகள்

ராமு :- நான் இண்டைக்கு ஒரு மணித்தியாலமாக
ஒரு வெள்ளைக்காரனோடு சரளமாய்க் கதைச்சனான்.

மதன் :- உனக்கு தான் இங்கிலீஸ் தெரியாதே .....
அதெப்படிக் கதைச்சனீ?

ராமு :- அவனுக்கு தமிழ் சரளமாய்த் தெரியும்.

அவன் :- பின்லேடனுக்குச் சோடா குடிப்பது பிடிக்காது

இவன் :- ஏனாம்?

அவள் :- சோடாவைத் திறந்ததும் "புஷ்" வென்று சத்தம்
போடுதாம்.....

பொங்கல் முதலாம் தரம் .....

பொங்கல் இரண்டாம் தரம்.....

பொங்கல் மூன்றாம் தரம் .....

அடிப்பாவி ஏன் இப்படித் தொண்டை கிளியக்
கத்தி ஊரைக் கூம்பிடுகிறாய்

இல்லைங்க சமையல் குறிப்பில் பொங்கல் இறக்கு முன்
அடுப்பில் வைத்து ஏலம் போடச் சொல்லி இருந்தது.

ஆசிரியர் :- நாலும் மூன்றும் எத்தனை?

மாணவன் :- ?..... ?.....?

ஆசிரியர் :- கடவுளே உந்தத் தேங்காய் மண்டைக்குள்ள மூளை
இல்லையா?

மாணவன் :- தேங்காய்க்குள்ளே முளை தான் இருக்கும் சேர்.

நிசாந்தி தங்கராஜா

2010 Arts

தேடல்

அறிவுப்பசி போக்க அறிவு நூல்களைத்
தேடுகின்றேன் - நான்
கடல் அளவு நூல்கள் தந்தாலும்
என அறிவுத் தாகம் தீராது.

பறந்து பறந்து தேனருந்தும் வண்ணாத்து
பூச்சியினைப் போல
நூலகத்தில் அமர்ந்து அமர்ந்து
தேடுகின்றேன் நல்ல நூல்களை

வாழ்க்கையின் அர்த்தமே கல்விதான்
அதன் அத்திவாரமே தேடல்தான்
மாணவி தேடிப்பார் தேசம் உனக்கே
உண்மையை நீ அறிய தேடலைத் தொடங்கு.

சாதனைகள் புரிய வேண்டுமா? வரலாற்றில்
உன்பெயர் பதிக்க வேண்டுமா?
தாமதியாது விரைவீர் தேடலை நோக்க
வெற்றி உமக்கே.

பார்த்தீபா
2010 Arts[A]
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

அயல் நாட்டு பழமொழிகள்

❖ கழுதையோடு நட்பு வைத்துக் கொண்டால் உதைகளை எதிர்பார்க்க வேண்டியது தான்.

- இந்தியா -

❖ நரி உபதேசம் செய்யத் தொடங்கினால் உன் கோழிகளை கவனி

- அல்பேனியா -

❖ நாய்களின் பிரார்த்தனையெல்லாம் ஏற்றுகொள்ளப்பட்டால் வானம் எலும்பு மழை பொழியும்.

- துருக்கி -

❖ நீர் அமைதியாக இருப்பதால் முதலைகள் இல்லை என்று நினைத்து விடாதே.

- மலேஷியா -

❖ ஒவ்வொரு பொய்யும் ஒவ்வொரு பல்லைத் தட்டுமானால் பலருக்கு பல்லே இருக்காது.

- சுவீடன் -

❖ கடவுளின் பேராற்றல் மெல்லிய பீங்காற்றில் இருக்கிறது. புயலில் அல்ல

❖ பிறர் குற்றங்களை கண்டு பிடிக்கும் முன் உன்னிடமுள்ள பாரிய குற்றங்களை காண்.

❖ பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாதிரு.

❖ துன்பங்களை உன்னிடம் குடி வைக்காதே அது உன்னை இறுதியில் அழித்து விடும்.

❖ தினமும் நாம் செய்யும் வேலைதான் நமக்கு உற்ற தோழன்.

க.கீதாஞ்சலி

A/L Arts


NSB
தேசிய சேமிப்பு வங்கியின் பொன் தூபரணங்களுக்குப்
பணம் வழங்கும் சேவை


யாழ் நகரில் முதலாவது
முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்.
Annai Nagaa Food City
Annai Nagaa
Food City
புதுப்பொலிவுடன்
சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்.
பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்
எலியன் ஹவுஸ் வஸ்திரிய் வகைகள்
(குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)
இறக்குமதி செய்யப்பட்ட பழ வகைகள், பழரசங்கள் மற்றும் குளிர்பான வகைகள்.
அன்பளிப்பு, அழகுசாதன வரவைத் திரவியங்கள்.
சிறுவர்களுக்கான ஆடைகள், பாடசாலை உபகரணங்கள்.
எழுது கருவிகள் மற்றும் பினவரிப் பொருள்கள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
வியாழக்கிழமைகளில் தவிர
இரவு 7.00 மணி வரை
திறந்திருக்கும்.
அன்னை நாகா புட் சிற்றி
175, K.K.S. Road, Jaffna. T.P - 021 5515, 021 7875


எங்களது நிகழ்வுகள் அதி நவீன கனடா தயாரிப்பு கணனி மூலம் சிறந்த வீடியோ கமராவினை
துணைகொண்டு வீடியோபடம் பிடித்திடவும் அதி நவீன புகைப்படக்கருவிகள் மூலம் வர்ணக்
கலவையாக கலர் கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பிடித்திடவும் திருமணம் பூரியுனித நீராடுவிழா
என்பவற்றின் வர்ணக் கறுப்பு வெள்ளை படங்கள் மூலம்
சிறந்த முறையில் அல்பம் தயாரித்திடவும்
அரவிந்
வீடியோ & போட்டோ
LOCAL, IDD, FAX, தொலைத் தொடர்புசேவை
T.P 222 2190
இல. 309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

யாழ் நாகரின் அனைத்து
புடவை ஜவுளிகளின் மொத்த
சில்லறை விற்பனை நிலையம்

Sivakanasan Tex
41, Grand Bazaar
Jaffna.

G.S.
Linganathan & Co.,
No. 13 – 14, Grand Bazaar,
Jaffna.

TCT MULTI TRADE CENTRE

ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்

வாடிக்கையாளர்களே!



தங்களுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும்

ஒரே கூரையின் கீழ்
தரமானதாகவும்,

மலிவானதாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P.No :- 021-7451896

நன்றியுடன் நான்

"எந்நன்றி . கொண்டார்க்கும் உய்விண்டாம் உய்வில்லை.
செய்நன்றி கொண்ட மகற்கு"

என்று வள்ளுவர் வாக்கிற்கிணங்க நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அந்த வகையில் "துடிப்பு" என்கின்ற இச் சஞ்சிகையினை வெளியிட ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அதிபர் அவர்கட்கும், பொறுப்பாசிரியர் அவர்கட்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து சஞ்சிகையானது சிறப்புடன் வெளிவர தமது ஆக்கங்களைத் தந்துதவிய கழக உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இச் சஞ்சிகையினை அச்சேற்றித் தந்த "[illegible]" எனது மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

நன்றியுடன்
செயலாளர்.
கு. நிரோசினி